இருந்தாலும், அவர்கள் பக்கத்திலேயே தங்குவதற்கு அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று கருதுகின்றேன். வீடுகள் சுலபமாகக் கிடைக்கும். எனவே, அந்த மருத்துவர்கள் அங்கேயே தங்கி, பணியைக் கவனிக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யலாம். யாராவது அதுபோல சரியாக வராமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக உரிய கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தட்டிக் கழிப்பதற்காக நான் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்களேகூட இது போல அவர்கள் சரியாக வருவதில்லை என்ற நிலையை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவே நான் இதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 404, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

சிறுவந்தாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக உயர்த்துதல்

**21234—திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்டமங்கலம் ஒன்றியம், சிறுவந்தாடு கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்று பொன்னான ஆட்சி செய்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று தெரிவித்தார்கள். முனைப்போடு

1994 ஏப்ரல் 27]

செயலாற்றிக் கொண்டிருக்கும் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் நடப்பாண்டில் முடியாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கண்டமங்கலத்திலே ஒரு "நான்— டாலுக் ஹாஸ்பிடல்" இப்பொழுது கம்யூனிட்டி ஹெல்த் சென்டராக மாற்றப்பட்டு அது இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, மிக அருகாமையிலேயே நாம் மீண்டும் இதுபோல அப்கிரேடட் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் ஆரம்பிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்தேன். ஆரம்ப சுகாதார நிலையம் இருந்து, அடிப்படையிலே என்னென்ன வசதிகள் அங்கே தேவையோ அதைச் செய்வதற்கு இப்பொழுது அந்த வசதிகள் அனைத்தும் அந்தப் பகுதியிலே இருக்கிறது. எனவே, தரம் உயர்த்தப்பட்ட அல்லது அப்கிரேடட் பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற அந்த வகையிலே அதைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால்தான் இதைத் தெரிவித்தேன்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறுவந்தாடு கிராமம் என்பது கண்டமங்கலத்திற்கு அருகிலே உள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்கின்ற காரணத்தினால், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாக அதே நிலையில், கவனிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டாவது அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பித்து எத்தனை ஆண்டுக் காலமானாலும் ஆரம்ப சுகாதார நிலையமாகத்தான் இருக்க வேண்டும். நாம் ஒரு வரையறையை வைத்திருக்கிறோம். முப்பதாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையை வைத்திருக்கிறோம். அடுத்து அதற்கு மேலே இருக்கின்ற மருத்துவமனை என்பது தாலுக்கா ஹாஸ்பிடல்ஸ். ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு மருத்துவமனை என்ற ஒரு நிலையை வைத்து இருக்கிறோம். அதன்படிதான் கண்டமங்கலத்திலே அந்த பிளாக்கிலே அது இருக்கிறது. அங்கே ஒரு கம்யூனிட்டி ஹெல்த் சென்டர் இருக்கிறது

என்று நான் தெரிவித்தேன். எனவே ஒவ்வொரு மருத்துவமனையையும் —ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் நாம் தரம் உயர்த்திக் கொண்டே வருவது என்பது முடியாத காரியம். அதன் காரணத்தால்தான் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு தாலுக்கா மருத்துவமனை என்ற வகையிலே நாம் வரையறை வைத்திருக்கிறோம். மிகப் பெரிய ஆய்வுக்குப் பின்னாலேதான் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தால் அதைப்பற்றி ஆய்வு செய்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 405, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

405—

சென்னைப் பெருநகர் அபிவிருத்திக்காக மத்திய அரசின் நிதி உதவி.

*20624—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் அபிவிருத்திக்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்விற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 24 லட்சங்களை மத்திய அரசிடமிருந்து அதனுடைய பங்குத் தொகையாகக் கீழ்க்கண்டவாறு பெற்றிருக்கிறது.

1988-89	..	5 லட்சம்
1989-90	..	5 லட்சம்
1990-91	..	14 லட்சம்